LC
N18
147987


ஓம்:

# வீட்டு வைத்தியர்

58-வியாதிகளுக்கு மருந்து செய்யும்முறை

# வைத்ய வித்யா

இந்த புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன.




Trade Mark.


OFFICE OF THE REGISTRAR
17


## எம். ஜே. ஷர்மா.

அவர்களால் இயற்றியது.


இந்தப் புஸ்தகம் எம். ஜே. ஷர்மா அவர்களைத் தவிர மற்ற யாவரும் இதைக் காப்பி செய்யக்கூடாது அப்படிக்கு மீறி இயற்றினால் மேற்படியார் கூறிய நஷ்டத்திற்கு ஜவாப்தாரியாகவும்.



எம். ஜே. ஷர்மா & கோ கணபதி அக்கிரஹாரம்

தெற்காவணிமூல வீதி, மதுரை.

...0] Registered copy right. [விலை அணா 3.

1918.

...அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது.



LC
N18
42987

## கூந்தல் வளரும் சடை பெருக்கும் தைலம்.




இந்த தைலத்தை சிரசில் தடவிக்கொண்டுவந்தால் கண்களுக்கு அத்தியந்த குளிர்ச்சியும் கூந்தல் அதிக சீக்கிரமாக வளரக்கூடியதும் அலாம்பரமான பார்வையைக் கொடுப்பதும் எப்போதும் உபயோகிக்காமல் இருக்கும்படியாகச் செய்யும், ஜனங்களுக்கு வலுவேரும், களிகத்தை முகத்தில் உண்டுபண்ணும், இனியில்லாத அழகைத் தந்து சவுகரியத்தை அடையச் செய்யும். அரையவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு ரூ 1-4-0. சாம்பிள் அரை புட்டி 1-க்கு அணா 0-8-0.

அநேக ஜனங்கள் சிலதைலங்களைப்பற்றி நோட்டீஸ் போட்டுக்கொண்டு விற்பனை செய்கிறார்கள் அதை வாங்கி பரீக்ஷித்திருக்கலாம். இப்போது நான் போட்டிருக்கிற தைலம் அநேக மூலிகையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை ஒரு முறை வாங்கிப் பரீக்ஷித்துப் பார்க்கவும், அது போகத்தில் தெரியவரும்.

என்னுடையதைலத்தை வாங்குவோர்கள் லேபிளையில் மந்திரகோலும், டிரேட் மார்க்கும் இருக்கும் பார்த்து வாங்கவும்.

## சில்லரை வியாதிகளுக்கு மருந்து.

இந்த உலகத்தில் வியாதிகள் அதிகமாக இருக்கின்றன. அநேக ஜனங்கள் வயிற்றுவலி, கீர்க்கடுப்பு முதலியவைகளினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், சிலர் ஓயாத தலைவலியினால் கஷ்டப்படுகிறார்கள். சிலர் தேள் கொட்டினவுடன் மந்திரவாதியிடமோ அல்லது வைத்தியரிடமோ ஓடுகிறார்கள் இவர்களுக்கு மிகவும் உபயோகமான மருந்துகளெல்லாம் சொல்லுகிறேன், இந்த மருந்துகள் செய்ய அதிக விலை பிடிக்காது. எந்த வியாதி வந்தாலும் சுலபமாய் நிவர்த்தி செய்துகொள்ளலாம். இந்த மருந்துகளோடு கூட எம். ஜே. ஷர்மாவால் செய்யப்பட்ட ஆர்யமாத்திரை டப்பி ஒன்று இருந்தால் வேறே வைத்தியரைத் தேடவேண்டியதில்லை. நான் சொல்லப்போகும் மருந்துகள் நம் வீட்டிலிருக்கும் சாமான்களினாலேயே செய்யலாம். இந்த சாமான்களை நாம் சமையலுக்கு மாத்திரம் உபயோகப்படுத்துகிறோமே தவிர மற்ற விஷயங்களுக்கு உபயோகிக்கிறதில்லை.

என் விலாசம்,

தெற்காவணிமூல வீதி கணபதிஅக்கிரா்ம்,

எம். ஜே. ஷர்மா அன் கோ, மதுரை.




# நாடிக்ஞானம்.

வாதம், பித்தம், கபம், என்றால் என்ன? சில வித்வான்கள் வாதம் என்றும், சிலர் பித்தம் என்றும், சிலர் கபம் என்றும் சொல்லுகிறார்கள். அவைகளை ஆதிமுதல் அந்தம்வரை எடுத்துரைக்கிறேன். சமஸ்கிருதத்தில் சுசர்த்சர்க் பாகபட் மகாதவிதான் நாடிக்கியான தரங்கணி என்ற இன்னும் அநேக புஸ்தகங்களில் நானாவிதமான நாடிகளைப்பற்றி எழுதியிருக்கிறது. ஆனால் அவைகளைப்படிக்க சிலருக்கு நேரமில்லை. தவிர சிலருக்குப் புரியவுமில்லை. ஆதலால் அந்தநாடிக்ஞான தரங்கணியைசுருக்கியும் குறுக்கியும் எல்லாருக்கும் தமிழில் சொல்லுகிறேன் இன்னும் இம் மூன்று நாடிகளுக்கு யாரார் தெய்வமென்றுரைக்கிறேன்:

இன்னும் நாடிக்கியான தரங்கணியை சிறுவர் படிக்கபோதிலும் அவர்களுக்கு அதில் ஞானம் உண்டாகும்படி அவ்வளவு தெளிவாய்ச் சொல்லுகிறேன். (1) வாதத்திற்குத் தெய்வம் பிர்ம்மா. (2) பித்தத்திற்குத் தெய்வம் சிவன். (3) கபத்திற்குத்தெய்வம் விஷ்ணு. இப்படி சில வித்வான்கள் சொல்லுகிறார்கள். சிலர் (1) வாதத்திற்குத் தெய்வம் வாயுதேவன். (2) பித்தத்திற்குத் தெய்வம் சூர்யன். (3) கபத்திற்குத் தெய்வம் சந்திரன் என்று சொல்லுகிறார்கள். நல்ல வைத்தியரைப்பற்றி சொல்லுகிறேன்.

வைத்தியர் ஒரேமனதாயிருக்கவேண்டும். அவர்வியாதியாய் இருக்கக்கூடாது. கவலையில்லாமல் இருக்கவேண்டும் நாடிபார்க்கும்போது நல்லமனதாயிருக்கவேண்டும். கோபமில்லாமலும் இருக்கவேண்டும். இப்படி எந்த வைத்தியருக்கு நாலுகுணங்கள் இருக்கின்றனவோ அவர்தான் நாடிபார்ப்பதில் கெட்டிக்காரர் என்று முன் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

147962



(1.) லாகிரிவஸ்து சாப்பிடுகிறவர்கள் (2) சஞ்சலமாயிருக்கிறவர்கள் (3) வெளிக்கு [மலஜலம்] போகும் தருணத்தில் அப்படி போகாமல் பணம்பறிக்க நாடிபார்க்கிற லோபிகள் (4) காமங்கொண்டிருப்பவர்கள் இந்தப்படி 4 குணங்கள் கொண்டவர்கள் நாடிபார்க்கக்கூடாது வியாதியஸ்தர்கள் எப்படி நாடி காண்பிக்கவேண்டும்? வியாதியஸ்தர்கள் வெளிக்குப்போய் வந்துசம்மணக்கால் போட்டுக்கொண்டு கை காண்பிக்கவேண்டும். இப்படிப்பட்ட வியாதியஸ்தர்களை நாடிபார்த்தால் நன்றாய்த்தெரியும் அவனுடைய நாடியும் நன்றாய் ஓடும்.

எந்த வியாதியஸ்தர்களை நன்றாய் நாடிபார்க்க முடியாது என்றால் வியாதியஸ்தர்கள் ஸ்நானம்செய்து விட்டும், போஜனம் செய்துவிட்டும், தலைக்கு வாசனை எண்ணை தடவிக்கொண்டும், பசியாயும் தாகமாயும் இருக்கும்போதும் தூக்கத்திலிருக்கும்போதும் நாடிபார்க்கமுடியாது.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் நாடி எப்படிப் பார்ப்பது என்றாலோ, பெண்களுக்கும் ஆண்களுக்கும் நாடிபார்க்கும் விதம் சொல்லுகிறேன் பெண்களுக்கு இடதுகையும், ஆண்களுக்கு வலதுகையும் இரத்தினவியாபாரி எப்படி இரத்தினத்தை பரீக்ஷிக்கிறானோ அம்மாதிரி வைத்தியர் நாடிபார்க்கவேண்டும். மேலும் அனுபோக சாலியாயிருக்கவேண்டும்.

நாடிபார்ப்பவர்கள் முதலில் கவனிக்கவேண்டியதாவது:— யாருக்கு நாடிபார்க்கிறோமோ அவர்கள் கையை நாம் தொடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய வலதுகை பெருவிரல் அடியிலிருந்து இரண்டு விரலிற்கு அப்புறம் நம்முடைய கையின் பெருவிரலடுத்த 3-விரலைவைத்து நம் பெருவிரலை அடியில் பிடித்துக்கொண்டு பார்க்கவும் கை காண்பிப்போர் அவர்கள்கையை உன்னுடைய கையின் மேல்புறம் இருக்கும் படியாக கையை நீட்டவேண்டும். நாம் 3-விரல்வைத்திருக்கும் இடத்தில் தால்தமனிஎன்னும் நாடியிருக்கிறது அந்த நாடிக்குப் பெயர்தான் ஜீவபரீக்ஷை நாடி (அதாவது) உயிர் இருக்கிறது அல்லது இல்லை என்பதைப் பற்றி தெரிவிக்கும் நாடி. இந்த நாடிதான் ஜீவாத்மாவிற்கு சுகதுக்கங் காண்பிப்பது. அந்த நாடிபார்ப்பவர்கள் தங்கள் மனதை அதனிடத்திற் செலுத்தி மிக்க கூர்மையாய்ப் பார்க்கவேண்டும்





அப்படிப் பார்த்தால் அந்த நாடியானது வீணை துடித்துக்கொண்டிருக்கும்பொழுது வீணையிலிருந்து பலவிதமான இராகங்கள் புறப்படுவதுபோல் அந்நாடியில் சுகதுக்கத்திற்குக் காரணம் ஆகிய வாதம், பித்தம், கபம்களின் குணம் புலப்படும். வீணை கேட்பவர் ஒரேமனதாய் கேட்டால் ஒழிய அவர்களுக்கு எல்லா ராகமும் கேளாது. அதுபோல் இந்தநாடி பார்ப்பவர்கள்புத்தி கூர்மையுடன் பார்த்தாலொழிய அவர்களுக்குப் புலப்படாது. அப்படிவைத்து பார்க்கும்வித்தில் முதலாவதாகிய பெருவிரலடுத்த விரலிடையில் துடிப்பது வாதநாடி. அதற்கு அடுத்தவிரல் பித்தநாடி அதற்கு அடுத்தது சேஷ்பம் (கபம்)நாடியாகும். பாம்புமாதிரியாவது அட்டை பூச்சிமாதிரியாவது நெளிந்து நெளிந்து துடிப்பது வாதநாடிப்பரீக்ஷை. காக்கைமாதிரியும் தவளைமாதிரியும் விரைவில் தாவித்தாவி குதித்துக்கொண்டிருப்பது பித்தநாடிப்பரீக்ஷை. மயில் அன்னம் பக்ஷி சேவல்புறாவும் எப்படி மெதுவாய்நடந்து செல்லுமோ அதுபோல்துடிப்பது சேஷ்பம் (கபம்) நாடிபரீக்ஷையாகும். ஒருசமயம் பாம்புமாதிரியும் மற்றொருசமயம் தவளைமாதிரியும் நாடிநடந்தால் வாதம் பித்தம் இரண்டும் சம்பந்தப்பட்டிருக்கிறதென்றும் அன்ன பக்ஷிமாதிரியும் பாம்புமாதிரியும் நடந்தால் வாதம் கபம் சம்மந்தப்பட்டிருக்கின்றதெனவும் குரங்கு தவளை அன்னம் இம்மாதிரி நாடி நடந்தால் பித்தம் கபம் இரண்டும் சம்மந்தப்பட்டிருக்கிறதென்றும் ரம்பம் அறுப்பதுபோல் நாடி கொஞ்சம் நடந்து மறுபடியும் நின்று பிறகு நடந்தால் சன்னி பாதம் என்றும், மெள்ள மெள்ள வளைந்து வளைந்து நாடிநடந்தால் மனிதன் கவலையுற்றிருக்கிறானென்றும் அறியவும். அப்படி நடக்கும் நாடிக்கு தம்பநாடி என்று பெயர். அந்தநாடி ஓர் இடத்தில் ஸ்திரமாயடிக்கும். அந்த நாடியில் சின்ன நாடி அப்படி அடித்தால் புருஷனுக்கு மிருத்யு சமீபத்திருக்கின்றது என்று அறியவும். இதே நாடி சன்னி பாதம் சூசிபிக்கும். காய்ச்சல் நிரம்பஜாஸ்தியடித்தால் நாடி சூடுகாண்பிப்பதோடு வேகமாகநடக்கும் ரோகிக்கு நாடி விதவிதமாக நடந்தால் சாவு நிச்சயம். ஒரேவிதமாக நடந்தால் அந்த மனுஷ்யாளுக்கு பிராணபயம் இல்லை. காமிகளுக்கு நாடி சீக்கிரம் நடக்கும். குரோதிகளுக்கும் கவலையுள்ளவர்களுக்கும் நாடி மெதுவாக நடக்கும். பயம் பூதம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டவ

களுக்கும் ஜீரண சக்தியற்றவர்களுக்கும் தாதுஹீனமுள்ளவர்களுக்கும் நாடிநிரம்பவும் மெதுவாக நடக்கும். ரத்தமில்லாதவர்களுக்கு நாடிகனமாக நடக்கும். கொஞ்சம் உஷ்ணமாகயிருக்கும் சீதபேதியுள்ளவர்களுக்கு நாடிகனமாகநடக்கும் பசியுள்ளவர்களுக்கு நாடி நிரம்பவும் சஞ்சலத்துடன்நடக்கும். ஜாஸ்திசாப்பிடுகிறவர்களுக்கு நாடிநிரம்பவும்லேசாக நடக்கும். அதாவது சீக்கிரமாகநடக்கிறது. சாப்பிட்டவுடன் நாடிமெதுவாக நடக்கும். மலச்சிக்கலுள்ள புருஷர்களுக்கு நாடி சீக்கிரமாகநடக்கும். வியாதியில்லாதவர்களுக்கு நாடிபலமாகநடக்கிறது. நாடிபரீக்ஷை அநேகவிதம் உண்டு. எப்படியோகிகள் ஈஸ்வரனை த்யானம் செய்கிறார்களோ அதுபோல் நல்லவயித்யர்கள் நாடியைக்கவனித்து அதன் மூலமாக சரீரத்தின் சுகதுக்கங்களை அறிகின்றார்கள்.

## சில்லரை வியாதிகளுக்கு மருந்து.

இந்த உலகத்தில் வியாதிகள் அதிகமாக இருக்கின்றன. அநேக ஜனங்கள் வயிற்றுவலி நீர்க்கடுப்பு முதலியவைகளினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிலர் ஓயாத தலைவலியினால் கஷ்டப்படுகிறார்கள். சிலர் தேள் கொட்டின உடன் மந்திரவாதியையோ அல்லது வைத்தியரிடமோ ஓடுகிறார்கள். இவர்களுக்கு மிகவும் உபயோகமான மருந்துகளெல்லாம் சொல்லுகிறேன். இந்த மருந்துகள் செய்ய அதிக விலை பிடிக்காது. எந்த வியாதி வந்தாலும் சுலபமாய் நிவர்த்திசெய்து கொள்ளலாம். இந்த மருந்துகளோடு கூட எம். ஜே. ஷர்மாவால் செய்யப்பட்ட ஆர்யமாத்திரை டப்பி ஒன்று இருந்தால் வேறே வைத்தியரைத் தேடவேண்டியதில்லை. நான் சொல்லப்போகும் மருந்துகள் நம் வீட்டிலிருக்கும் சாமான்களிலிருந்தே செய்யலாம். இந்த சாமான்களை நாம் சமயலுக்கு மாத்திரம் உபயோகப்படுத்துகிறமே தவிர மற்ற விஷயங்களுக்கு உபயோகிக்கிறதில்லை.

(1) தேள்கடி மருந்து கொட்டினவாயில் சுண்ணாம்பு, மஞ்சள் இவைகளைச்சேர்த்து தேய்க்கலாம் (2) படிகாரம் துத்தம் இவை இரண்டையும் இரும்புச் சட்டியில்போட்டு மெழுகுபோல்ஆக்கின பிறகு உபயோகிக்க வேண்டும். அம்மெழுகு போன்றதை வில்லைகளாக கட்டி கட்டியாக்கினபிறகு அனலில்காட்டி தேள்கொட்டிய இடத்





தில்வைக்கவும். நிரம்பவும்சொல்பமானது. 3வீடுகளில்இருக்கக்கூடியதுமான. புளியங்கொட்டையை சூடேரத்தேய்த்துகொட்டுவாயில் வைக்கலாம். விஷம் இரங்கிவிடும். பிறகு கொட்டைதானாய்க்கீழே விழுந்துவிடும். (4)தந்தரோக நிவாரணி. சுட்ட பாதாங்தோல் பலம் 1 சுட்டபாக்குபலம் (1) மர்வுபல்பம்பலம் (1) நாமத்திற்கு உபயோகிக்கும்வெள்ளைசூரணம் ரோமாஸ்தகி தோலா1, இவைகளைப் பொடிசெய்து உபயோகிக்கலாம் பற்பொடியில் வாசனை உண்டாக வேண்டுமானால் அத்தர் துளிவிட்டு வைத்துக்கொள்ளவும். (5) இந்த மருந்து தயார்செய்ய சக்தியற்றவர்களாயிருந்தால் உப்பு பலம்1, வேப்பம்பட்டை பலம் 1 இவைகளை சுட்டு சாம்பலாக்கி உபயோகிக்கவும். (6) இரணக்களுக்கு எல்லாழ் இரசம், கந்தகம் மயில்துத்தம், செந்தூரம், முர்தார்சிங்கு இவைகளை பொடிசெய்து பசுவின் வெண்ணையால் 12 தரம் சுத்திசெய்து உபயோகிக்கவும். (7.) இருமலுக்கு மருந்து திப்பிலி, சுக்கு, மிளகு, பிஞ்சுக் கடுக்காய், நாள்சென்ற வெல்லம், கருப்புட்டி, வஸ்துக்களை கொஞ்சம் கொண்டுவந்து அவைகளில் திப்பிலிதுண்டுகால்தோலா, சுக்குகால்தோலா மிளகு 5, பிஞ்சுகடுக்கா 1, இவைகளால் கொஞ்சம் அரைத்து அரைத்தோலா வெல்லத்தில் கலந்து சுண்டக்காய்ப் பிரமாணம் காலை மாலையில் சாப்பிடவும். புளிப்பு வாயுவானவஸ்து நெய் எண்ணை முதலியவை நிவர்த்திக்கவும்.

(8.) கண்ணில் மேகநீர்களைக்கண்டிக்கதக்க சூர்மா சூர்மாகட்டி தோலா பத்து இதை வாழைமரத்துக்குள் மூன்றுநாளும் வேப்பமரத்துக்குள் ஏழுநாள்களும் வைக்கவேண்டும். இதனால் அது காரமாகிறது. பிறகு கற்பூரம் 1 தோலா ஏல அரிசி 1 தோலா இவைகளை வேப்பிலை ரசம்விட்டு அறைக்கவும். இது உலர்ந்தபிறகு பன்னீர் விட்டு அறைக்கவும் அது நன்றாக உலர்ந்தபிறகு நேத்திரங்களில் உபயோகிக்கவும் நேத்திரகாந்தியும் பார்வையும் நன்றாயிருக்கும். நேத்திரங்கள் வெகு குளிர்ச்சியாக வேண்டுமானால் அதில் கொஞ்சம் பெப்பர்மெண்டு தைலம் கலந்து அரைத்து வைத்துக்கொள்ளவும்(9)ரோமசங்காரி(Barium Sulphite)பேரியம்சல்பைட் 1தோலா தாளகம் 1தோலா மனோசிலை 1தோலா இவைகளைசேர்த்து அரைத்து தேவையான இடத்தில் பூசிக்கொண்டால். ரோமங்கள் யாவும் அப்போதே உதிர்ந்துவிடும். இதுதவிர ரோமங்கள் நம் ஆயுசு

பரியந்தம் உற்பத்தியாகமாட்டாத மருந்துகளும் இருக்கின்றன (10.) 50வியாதிகளுக்குஒரேமருந்து கற்பூரம் 1தோலாவைத்து ஓமம் 1 தோலா பெபர்மெண்டு கால்ரூபா எடை இவைகளை அரைத்து புட்டியில்போட்டு காரக்குடன் வைத்துவிடவும் சாமான்கள் பூராவும் உருகி மஞ்சள்வர்ண எண்ணெய்போல் ஆகிவிடும். இதைக் கொண்டு புத்திமான்கள் அநேக ரோகங்களுக்கு உபயோகித்து அதிக திரவியம் சம்பாதிக்கிறார்கள். ஆனால் என்னுடைய வைத்தியசாலையிலே இதே மருந்தை பித்தத்திற்கும் அஜீர்ணத்திற்கும் மட்டும் உபயோகித்து வருகிறேன். இந்த மருந்தானது 3 துளி சக்கரையில் சாப்பிட்டால் பித்தத்துக்கும் காலராவுக்கும் நல்லது.

11. தேள்கோட்டுக்கு உப்பை நல்ல தண்ணீரில் ஒன்றாகக்கரைத்து, தேளினால் கொட்டப்பட்டவரின் கண்களில் ஒவ்வொரு துளி விடவும் உடனே விஷம் இறங்கிவிடும் 12. தலைவலிக்கு மேல் சொன்ன ஜலத்தை இரண்டு கண்களிலும் ஒரு ஒரு சொட்டு வீத விட்டு இரண்டுபொட்டையும் பிடித்துஉருவிவிடவும். கொஞ்சம் அனுகூலம் இருந்தால் இன்னம்இரண்டுதரம் போடவும். போட்டவுடன் சொஸ்தமாகிவிடும். 13. தலையில் பூச்சி அரித்து மயிர்விழுந்து விடுவதற்கு உப்பை நன்றாக பொடிசெய்து அந்த இடத்தில் நன்றாகத் தேய்க்கவும் உடனே அந்தஇடத்தில் மயிர்வளரும். வளர்ந்தால் மறுபடியும் விழாது.

14. பித்ததிரேக முடையவர்களுக்குத் தேள்கொட்டினால் வாந்தி முதலியவைஎடுத்தால் வேறொருவர் கொஞ்சம்புளியை எடுத்து வாயில்போட்டு மென்று அவருக்கு வலதுபுறம் கொட்டியிருந்தால் இடது காதில் ஊதவும். இடதுபுறம் கொட்டியிருந்தால் வலதுகாதில் ஊதவும். இப்படிசெய்தால் உடனேவிஷம் இறங்கிவிடும்.

(15.) புளியங்கோட்டையின் உபயோகம் தேள்கொட்டின இடத்தில் புளியங்கொட்டையை நன்றாக சூடுபெறத்தேய்த்து அந்தசூட்டோடு வைக்கவும். வைத்தவுடன் பிடித்துக்கொள்ளும். விஷம்இறங்கினவுடன் தானாகவே விழுந்துவிடும். 16. மலமூத்திரங்களுக்குப் போகையில் எறிவது நிற்பதற்கு புளியங்கொட்டையை 3. நாள் தண்ணீரில் ஊரப்போட்டவும். தோலியை நீக்கி வெள்ளைப் பருப்பை எடுத்து நன்றாக அரைத்து அதில் அரைரூபாய்





எடை எடுத்து அரை ரூபாய்எடை கல்கண்டு சேர்த்து காலையில் 5 மணிக்குச்சாப்பிடவும். மிகஜாஸ்தி எரிச்சல் இருந்தால் 7-நாள் இந்தமாதிரிசாப்பிடவும். கொஞ்சமாக இருந்தால் 3-நாள்சாப்பிட்டால் உடனே சொஸ்தமாகும். 17. தேள்கொட்டுக்கு வெங்காயம் உபயோகிக்கலாம். வெங்காயத்தை பிழிந்து கண்ணுக்கு ஒருசொட்டுவீதம்விட்டுவிடவும்.விஷம்இறங்கிவிடும். 18.கண்வலி கண்சிவத்தல் முதலியவைகளுக்கு. வெங்காயத்தை எண்ணெயில் பிழிந்து நன்றாகக்காய்ச்சி ஓசை அடங்கினபிறகு கீழே இறக்கிவைத்துவிடவும். குளிர்ந்தபிறகு சீசாவில் அடைத்துவைத்துக்கொண்டு ஒரு ஒரு சொட்டு கண்ணில்போட்டுக்கொள்ளவும். மேற் சொன்ன வியாதிகள் சொஸ்தமாகிவிடும்.

19. பெருங்காயம். வாயு, வயறு ஒப்புதல் முதலியவைகளைக் கண்டிக்கும். பெருங்காயத்தை நன்றாக நெய்யில்வறுத்துகரிஇந்துப்போடு பொடிசெய்து கொஞ்சம் எடுத்து வாயில்போட்டுக்கொண்டு கொஞ்சம் வென்னீர்மேலே சாப்பிடவும். பெருங்காயத்தை ஜலத்தைவிட்டு அரைத்து கொஞ்சம் எடுத்து துணியிலே அல்லது பஞ்சிலே வைத்து தொப்பிளில் வைத்துக்கொள்ளவும். இப்படிசெய்தால் வயற்று ஒப்புலம் வாயுமுதலியவைகளைக் கண்டிக்கும்.

20. வயற்றுவலிக்கு உஷ்ணம் வாயு முதலியவைகளுக்கு சுக்கை நன்றாகப்பொடிசெய்து அதின்சரிபங்கு சக்கரை சேர்த்து சாப்பிட்டவுடன் வெந்தண்ணீர் அல்லது பால் சாப்பிடவும். உடனே கண்டிக்கும். போய் என்பதே கிடையாது என்று சொல்லுகிறேன். சும்மாவாது ஆடுகோழி முதலியவைகளை கொல்கிறார்கள். அதெல்லாம் சுத்தப்பிசகு. மந்திரவாதிகள் தாங்கள் பிழைப்பதற்கு வேஷம்போடுகிறார்கள். அப்படியாராவது மந்திரவாதி பேய் ஆடு கோழிதின்பதைக்காட்டினால் அவகளுக்கு ரூபா 250 கொடுக்கிறேன். ஆனால் ஒருவிஷயம் மனதில் வைக்கவேண்டும். பேய் என்பது காற்றில் சஞ்சாரம் செய்கிறதென்றும், ரூபமில்லையென்றும் சொல்லுகிறார்கள் அதற்கு பலியாகஇருக்கிற ஆடு கோழி சர்ராயம் முதலியவற்றை அதுவாக தின்பதைக் காட்டவேணும். வேறு ஒருவர் ஆட்டையோ கோழியையோ வெட்டக்கூடாது.

அதுவாக தின்றுவிட்டு எலும்பை எறியவேண்டும். வெட்டிக்கொடுத்தால் புத்தியில்லாமல் பேய் பிடித்தவர்கள் பிடியாதவர்கூட தின்பார்கள். அதில் ஒன்றுமில்லை அந்தப் பேய்த் தின்பதென்று காட்டவேணும். அப்படி யார் என்னிடம் காட்டுகிறார்களோ அவர்களுக்கு 250ரூபா கொடுக்கிறேன். நான் சொல்லுகிற கலிகத்தைப்போட்டால் பேய்க்குப்போய் இந்தக்கலிகம் பாதைபடுத்தவேண்டும். எப்பொழுது பேய் பிடித்தவர்களுக்கு பாதைப்படுத்துகிறதோ அதிலிருந்து பேய் என்பதே இல்லையென்று நிச்சயித்துக் கொள்ளலாம். இந்தக் கலிகம் ஒரு கெடுதலும் செய்யாது. சும்மா உபயோகிக்கலாம். பெருங்காயம் மிளகு வெள்ளைப்பூண்டு மூன்றையும் ஜலம்விட்டு மைபோல் அரைத்து கண்ணில் கொஞ்சம் போடவும். இந்த மூணு சாமான்களையும் பொடிசெய்து மூக்குப்பொடியோடு கலந்து உருஞ்சச்சொல்லவும். அல்லது துளசிஇலை மிளகு இரண்டையும் மைபோல் அரைத்து கண்ணில்போடலாம். மிகவும் பேய் உக்கிரமாக இருந்தால் பாதி கிராம்பு சேர்த்து அரைத்துப்போடவும் பேய்பிடித் திருக்கிறவர்களுக்கு இது தெரியக்கூடாது. அப்பா இந்த கலிகம் நான் சொல்லுகிறது இல்லை. வடமொழியில் அமுர்தஸாரகரம் என்ற புஸ்தகத்தில் இருக்கிறது.

21. பேய்ப்பிடித்ததென்று ஆடுகிறவர்களுக்கு செருப்பு, விளக்குமார் முதலியவைகளால் 5 அடி அடித்தால் பேய்நிற்காது. அதுபோல் நாம் செய்தால் பேய் இருக்காது மறுபடியும் வந்தால் 11-நாளைக்கு விடியற்காலத்தில் விளக்குமார் பூசை செய்யவேண்டும். 22. சர்ப்பவிஷங்களுக்கு புறசம்பட்டை மிளகு (சமபங்கு) கொஞ்சம் கொண்டுவந்து ஜலம்விட்டு அம்மியில் அரைத்து மெழுகுபோலாக்கி 5 ரூ. எடை எடுத்துக்கொண்டு 3-வேளை சாப்பிடவும் கரு நாகப்பாம்புக்குக்கூட இந்த மருந்து குணப்படுத்தும். 23 சிலபேருக்கு பல்லுக்கட்டிப்போனால் பூந்திக்கொட்டையை பொடிசெய்து அந்தப்பொடியினால் தேய்க்கவும் உடனே பல்திறக்கும் பிறகு மேல்சொன்ன மருந்து கடித்த ஒருமணிக்குள் கொடுக்கவேண்டும்.

மஞ்சள் வாய்வுக்கு மருந்து. சிலருக்குவாய்க்குள் வீக்கம் எரிச்சல் பல்வலிமுதலியவைகள் வருகின்றது. அவர்களுக்கு ஒரு மருந்துசொல்கிறேன். (24) மஞ்சளை எடுத்து நெருப்பில் கொஞ்ச





நேரம் வைத்துப்பிறகு எடுத்துபொடி செய்யவேண்டும். வேப்பம் பட்டையும் உப்பு இரண்டும் சமபாகம் கொண்டுவந்து பொடிசெய்யவும். மிளகு 4 லில் 1-பாகம் எடுத்து அதையும் பொடிசெய்து சேர்க்கவும். இதைதினமும் பல்தேய்த்தால் பல்நோவு, பல்வலி முதலிய வாயுவுகளைக் கண்டிக்கும். 25 நிரம்பநாளாகக் காயாத புண்ணுக்கு மேற்சொன்னபடி மஞ்சளைச்சுட்டு பொடிசெய்து வஸ்திரகாயம் செய்யவும். மறுபடியும் வஸ்திரகாயம் செய்ததை பொடிசெய்து வஸ்திரகாயம் செய்யவும், இந்தமாதிரி 3-தடவை செய்து மிகவும் பொடிப்பொடியாக ஆனவுடன் அந்த காயத்தில் நிறைத்து அமுக்கவும். இந்தமாதிரி செய்தால் காய்ந்துவிடும். 26. வீட்டு மெத்தையிலிருந்தோ அல்லது மரத்திலிருந்தோ கீழே விழுந்து அடிபட்டதற்கு மஞ்சள் 1 ரூபாய்எடை எடுத்து பாலில் போட்டுக் காய்ச்சி அந்தப்பாலை கொடுக்கவும். குணம் செய்கிறது. வலி ஒன்றும் இராது. 27. நாய்க்கடி, எலிக்கடி, பூனைக்கடி, இந்த வியாதிகளுக்கு சுண்ணும்பு, மஞ்சள், உப்பு, இவைகளை கொஞ்சம் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து அதை, அந்த கடிவாயில் வைத்து நன்றாய்த் தேய்க்கவும். மருந்து உள்ளே போகவேண்டும். இந்த மருந்து தேள்கடிக்கு சுகம்செய்யும். மஞ்சளில் குணம் இன்னும் இருக்கிறது. இடம் இல்லாததினால் அடுத்தபக்கத்தில் சொல்லுகிறேன். ரோமசங்காரித்தைலம் 28. சுண்ணும்பு தாளகம் இரண்டையும் (சுண்ணும்பு1-பாகமும் தாளகம் இரண்டுபாகமும்) ஜலம்விட்டு அரைத்து மேலே தடவவும். 5 நிமிஷம் கழித்து சுத்தம் செய்யவும் மயிர் விழுந்துவிடும். இது செய்து எரிச்சல் இருந்தால் தேங்காய் எண்ணை தடவவும். 29. கொத்தமல்லியை வெந்நீரில் போட்டு கஷாயம்செய்து அதில் கொஞ்சம் பாலும் சர்க்கரையும் போட்டு காப்பிமாதிரி சாப்பிட்டால் பித்தம், மயக்கம், கிறுகிறுப்பு முதலியவைகளைக்கண்டிக்கும்.

(30.) அஜீரணம்:—ஓமம், உப்பு இவை சேர்த்து உள்ளுக்குச் சாப்பிட்டு இரண்டுவாய் ஜலம் குடிக்கவும், சகல அஜீர்ணமும் நிவர்த்தியாகும். 31. பெருஞ்சீரகம் கஷாயம் ஒரு கரண்டி உள்ளுக்குச் சாப்பிட்டால் தாகம்நிவர்த்தியாகும், வியாதிஸ்தருக்கும் கொடுக்கலாம். 32. தண்ணீர் தாகம் ஜாஸ்தியானால் சின்னஏலக்கா

...கஷாயம் செய்து சாப்பிடலாம். 33. ...யில் இன்னம் ...பாலும் சர்க்கரையும் போட்டு சாப்பிட்டால் தாகம் நிவர்த்தியாகும். 34. எலுமிச்சம்பழம் ரசத்தில் உப்புபோட்டு உள்ளுக்குசாப்பிட்டால்சும்மாவெளியேபோகிறதற்கு சாந்திசெய்கிறது. 35. திப்பிலி பிப்லாமூல்நிலவேம்பு சுக்குகஷாயம்செய்து,கொஞ்சம் தேன்விட்டு சாப்பிட்டால் ஜுரம், இருமல், இவைகளை தீர்க்கிறது (36.) ஆட்டுப்பாலில் தாமரைவிரையை அரைத்து கண்யிமைமேல்பத்துபோட்டால் கண்நோய்கள் தீரும். (37.) கழுந்தக்குட்டியின் 12 நாள் குட்டி) விஷ்டையில் தேன் சேர்த்து கண்மேலும் கண் உள்ளும் மை மாதிரி போட்டால் கண் நோய்கள் தீரும். (38.) அபின், சிகப்பு சந்தனம், மஞ்சள் இவைகளை அரைத்து கண்மேல்போட்டால், கண்நோய்கள் எல்லாம் தீரும். (39.) நெல்லிக்காய் வத்தல், பிஞ்சுக்கடுக்காய், கடுக்காய் இவைகளை கஷாயம்செய்து நெய்போட்டு சாப்பிட்டால் கண்பார்வை குறைவை நீக்கும் (40.) ரத்தகுல்மத்திற்கு சுண்ணாம்புத் தண்ணீரில் மிளகுபொடி, நெல்லிக்காய் வத்தல் போட்டு உள்ளுக்கு சாப்பிட்டால் வியாதி தீரும். (41.) கண்டங்கத்திரிக்காய், திப்பிலிப்பொடி இவைகளைப்போட்டு கஷாயம் செய்து உள்ளுக்குச் சாப்பிட்டால் இருமல் தீரும். (42.) முள்ளங்கிரஸம், மஞ்சள்ரஸம் இதில் சங்கை பொடிசெய்துபோட்டு காய்ச்சி கட்டிமேல் போட்டால் கட்டி போய்விடும் (43.) பிஞ்சுக் கடுக்காய் பொடியோடு வெல்லம் சேர்த்து உள்ளுக்குக்கொடுத்தால் பித்தரூடு தீரும் (44.) நெட்டிலிங்கவிரை பொடியோடு தேன் அல்லது மோர் சேர்த்து சாப்பிட்டால் வயிற்றில் பூச்சியிருந்தால் எல்லாவற்றையும் நீக்கும் (45.) பேரீச்ச இலையை கஷாயம் செய்து ராத்திரியில் சும்மா வைத்துவிட்டு காலையில் தேன்போட்டு சாப்பிட்டால் பைத்தியம் தீருகிறது. (46.) இளநீரில் தேன்போட்டுசாப்பிட்டால்வயிற்றிலிருக்கிறபூச்சிகளை நீக்குகிறது. 47. இஞ்சிசாரில்தேன்போட்டு சாப்பிட்டால் இருமல், சுவாசம், சளி முதலியவைகளை நீக்குகிறது. 48. பெரிய கடுக்காயை நெய்யில் போட்டு பிறகு அதின்மேல் சாணியைப்போட்டு மெழுகி சுட்டு வாயில் வைத்துக்கொண்டிருந்தால் இருமல் நீங்கும்.





## அத்திமரத்தினால் உண்டாகும் பிரயோஜனங்கள்.

அத்திமரம்மிகப்பெரிது இந்தமரம்பூவில்லாமல்காய்க்கும். இந்தமரத்தில் பால் உண்டு. இதற்கு சமஸ்கிருதத்தில் கூலர் என்றும் பங்காளிபாஷையில் யக்கட்டமூர் என்றும் மராட்டிய பாஷையில் ஊம்பர் என்றும் பார்வீகத்தில் அஞ்சீரேஆதம் அராபியில் ஜமீஜ என்றும் ஆக்கிலேய பாஷையில் கிக்டீ லாட்டினில் பைக்சாக்லோமேரீட்டா. இந்தமரம் மிகவும் சீதளமானது அசதி திரேகத்தில் வெடிப்பு பித்தம் ரத்தம் கெடுதல் இவைகளைநீக்குகிறது. இதை மேற்சொன்ன வியாதிகளுக்கு உபயோகிக்கும் முறை. சீதபேதிக்கு இலையை அரைரூபாய் எடை தண்ணீரைவிட்டு அரைத்து உள்ளுக்கு சாப்பிடவும். 49. வயிற்றில் அல்லது உடம்பில் எரிச்சல் இவைகளுக்கு அத்திமரத்தின் பட்டையில் ஒன்னரைதோலாவோடு 2 பலம் ஜலம்சேர்த்துச் சாப்பிடவும். 50. ஒரு நாளைக்கு 5 அல்லது ஆறுதடவை வெளியே போகிறதற்கு அத்திக்காயை சாப்பிட்டுவிட்டு மேலே மோர்சாப்பிடவும். 51. குழந்தைகளுக்கு பச்சையாகவும், மற்ற எவ்விதமாவது சும்மா வெளியேபோனால் அத்திப்பால் அரை ரூ. எடையில் கொஞ்சம் சக்கரைபோட்டு கொடுக்கவும். 52. அர்த்தாங்கரோகத்திற்கு (அர்த்தாங்க ரோகமாவது வலதுகால், வலதுகை, வலதுதொடை முதலியவை அல்லது இடதுகை, இடதுதுடை, இடதுகால் முதலியவைகளில் எப்போதும் வலித்துக் கொண்டிருப்பதற்கு அத்திப்பாலை எடுத்து வலிக்கிறயிடத்தில் தடவவும். இத்திரியத்தில் வீக்கம், வெட்டை, கைகால் எரிச்சல், தாகம் ஜாஸ்தி இவைகளுக்கு, அத்திக்காயின் காம்பு அரை ரூ. எடை, மிளகு அரைக்கால் ரூ. எடை தண்ணீர் 6-அரை ரூ. எடை சேர்த்து அரைத்து உள்ளுக்கு சாப்பிடவும். இது பசியை உண்டுபண்ணும். 53, 54 கட்டி, அரையாப்புக்கட்டி முதலியவைகளுக்கு உவர்மண்ணோடு அத்திப்பாலைக் கலந்து கடிதாசியில் தடவி கட்டிமேல் ஒட்டிவைக்கவும். 55. வெள்ளைவியாதி அல்லது வெட்டைக்கு—அத்திப்பழம் சாப்பிட்டு கொஞ்சம் இந்துப்பு சாப்பிடவும். 56. சும்மா மாசப்பிரவேசமாகிறவர்கள் அத்திப்பட்டை 2-அரை ரூ. எடை அரைக்கால்சேர் ஜலம் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் சுகம் தரும். 57. கர்ப்பம் இல்லாதவர்களுக்கு அத்திக்கட்டையை மைதாமாவுபோல் பொடி

செய்து கோதுமைமாவு சேர்த்து நெய்யில் லீயன்பண்ணி சாப்பிடவும். 58. மூக்கில் சிலசமயங்களில் இரத்தம் வருவதற்கு அத்திப்பழத்தை சாப்பிட்டால் இதை நிறுத்தும். என் அற்ப புத்தியினல் இந்த அத்திமரத்தின் குணங்களில் சிலது சொன்னேன். இதை நான் அனுபோகத்தில் செய்து பார்த்திருக்கிறேன். இதைப்போல் நீங்கள் வீட்டில் செய்து லாபமடையுங்கள். வியாதிகளினல் கஷ்டப்படுகிறவர்களுக்கு மருந்து தயார் செய்து கொடுத்து தர்மஞ் செய்த பலனை அடையுங்கள். இதனல் எனக்கும் கவுரவத்தைக் கொடுங்கள்.

பம்பாய் எலெக்டிரிக் பவர்:— முதலில் ஒரு அவுன்சு நைட்ரிக் ஆசிட், ஒரு தொலா ரசம்போட்டு சீசாவைமூடாமல் வைக்கவும் ரசம்கரைந்த பிரகு அதைஎடுத்து 10 அவுன்சு தண்ணீர் பேரட்டு உபயோகிக்கவும் இதில் ஒரு அவுன்சு மருந்துடன் ஒரு அவுன்சு தேங்காய் எண்ணை கலந்து சொரிசிரங்குக்கு உபயோகிக்கவும் கண்ணில்படகூடாது ஜாக்கிரதை தேங்காய் எண்ணெய் கலக்காமல் பித்தளைகாசுகளுக்கு கில்ட் குடுக்க உதவும் அதாவது செப்புக்காசுகளில் தடவி கடையில் கொடுக்கக்கூடாது.

## மந்திரம்.

—:o:—

மந்திரம் என்பது என்ன? வாக்குசக்தி மந்திரம். நாம் சொல்லுகிற வார்த்தையினல் ஒரு காரியத்தை செய்ய நினைத்தால் உடனே அது பூர்ணமாகிறது. இதேமாதிரியாய் ஒவ்வொரு சப்தமும் மந்திரமாகிறது. நல்லவார்த்தையில் எல்லாருக்கும் பிரீதியிருக்கிறது. ஆகையினல் இது நல்ல மந்திரம். கெட்டவார்த்தை சொன்னல் அது கெடுதல் கொண்டுவருகிறது. ஆகையினல் அது கெடுதல் மந்திரம். நான் ஒரு மனிதனை வாருங்கள் என்ருல், முதலில் வருகிறதில்லை. பிறகு வாருங்கள் வாருங்கள் என்று கூப்பிட்டபிறகு வருகிருர். காரணம் என்ன நாம் சொன்ன வார்த்தையின் பலன் ஆகையினல் இதுவும் ஒரு மந்திரம்.

ஒரு குழந்தையை இங்கே வா என்ருல் முதலில் வருகிறதில்லை பிறகு கையில் ஏதாவது தின்பண்டம் வைத்துக்கொண்டு





மறுபடியும் மறுபடியும் கூப்பிட்டால் தானகவே தாய் தகப்பனை விட்டு வந்துவிடுகிறது. காரணம் என்னவென்ருல் நம் மந்திரத்தின் காரியம்தான். இந்தக்காலத்து ஜனங்கள் சமுஸ்கிரதத்தில் சொல்லிவிட்டால் அது மந்திரம் என்றும் தமிழில் சொன்னல் பொய் என்கிருர்கள். உதாரணத்திற்காக ஒரு சமுஸ்கிரத மந்திரமும் அதன் அர்த்தமும் சொல்லுகிருேம். நீங்கள் சரிதானவென்று பாருங்கள்

தேள்கடிக்கு மந்திரம்:—பௌர்ணமை தினம் மனிதசஞ்சாரமில்லாத இடத்தில் நடுநிசியில்போய் 21. கொடிமுந்திரிப்பழம் வைத்துக்கொண்டு பின் சொன்ன மந்திரத்தை 7-தடவை அதன்மேல் ஊதவும். மந்திரம். ஓம் விச்சுக விஷதாரோ, ஆராம்பர் பூரோகோ ஹனுமானுக்கிலகே துவகாய் விஷ்கோ காயகர்லகா மாயி ஜாரே ஜாரே விஷஜல்தீஷே உடஜா, அர்த்தம். ஓம் தேளின் விஷம் தூரமாகவேணும். இவருக்கு நல்லசுகம் வேணும் இதன் விஷம் அனுமான்மேல் சத்யம். இந்த விஷத்தை காளி சாப்பிட்டுவிடவேணும், போ, போ. விஷம் சீக்கிரத்தில் போவேணும். ஜனங்களுக்கு சமுஸ்கிரதத்தில் சொன்னல் மந்திரம் என்று எடுக்கிருர்கள். சமுஸ்கிரதம் தெரியாதவர்கள் அர்த்தத்தை பாடம் செய்யலாம். மேலே சொன்ன கொடிமுந்திரிப்பழத்தை ஒரு சாதுவுக்கு சாப்பிடுவதற்காகக் கொடுக்கவேணும். இப்படி செய்தால் மந்திரம் சித்தியாகிறது. சிகப்புத் தீக்குச்சியை எடுத்து கடிவாயில் தேய்க்கவும். தேய்க்கும்போது இந்த மந்திரமாவது அல்லது அவர் அவர்கள் குலதெய்வத்தின் பெயரைச்சொல்லி அவர்மேல் ஊதவும். இப்படிச்செய்தால் விஷம் இறங்கும். மந்திரம் 101 தடவை சொல்லுமளவும் தேய்க்கவேண்டியது. சொஸ்தமானவர் செவ்வாய்கிழமை குரங்குக்கு கடலை போடவும்.

2. சர்ப்பத்திற்கு மந்திரம்:—சர்ப்பம் கடித்தால் கொஞ்சம் மேலும் கீழும் இருக்கிக் கட்டவேணும். பிறகு வாழைச்சார் கொண்டுவந்து பின் சொன்ன மந்திரத்தை ஏழுதடவை மனதுக்குள் சொல்லி அதன்மேல் ஊதி உள்ளுக்கு சாப்பிடக் கொடுக்கவும். கடிவாயில் வாழைச்சாரை ஊற்றி மந்திரத்தை 1000-தடவை ஜபிக்கவேண்டும். ஈசுவரகிருபையினல் தானே பிழைப்பான்

பிறகு ஐந்து அனைதைகளுக்கு சாப்பாடு போடவும். மந்திரம் ஓம் ர்பவிஷ நஷ்டஹோரோகி ஹிருஷ்ட பிரஷ்டஹோ, கனேய்யா கனுதேகா ஊபர்கானு நசேகா. சேஷநபிக்கி மச்சேதுவகாயி க்ஷமணசக்திசரே ஸகாயி பம் பம் விஷ ஹர் அர்த்தம். சர்ப்ப ஷம் நாசமாகவேணும் ரோகி நல்லபலமாக ஆகவேணும். கிருஷ் கவான் காளி நாகத்தின்மேல் நர்த்தனம் செய்திருக்கிருர். ஆதிசேஷ நாகத்திற்கு நான் நத்தியம் செய்கிறேன். லெக்ஷமண க்தியின் பிரபாவத்தைக் கொஞ்சம் வேண்டுகிறேன். பம் பம் ஷம் போ. 3. குழந்தைகளுக்கு திருஷ்டி முதலியவைகளுக்கு ந்திரம் யாராவது ஒருவர் காலைவேளையிலும் (சூரியனுக்குமுன்) யங்காலவேளையிலும் வேப்பிலை கையில் வைத்துக்கொண்டோ ல்லது ஜலம் வைத்துக்கொண்டோ ஜபம் செய்யவேணும். மந் ரம். ஓம் ஷத்ரன்ய சங்கர் பாலரக்ஷகாய நம: அர்த்தம். ஓம் ஹ மகேஸ்வரா நீங்கள் எழுந்து குழந்தையை ரக்ஷைசெய்யுங் ள். 4. ஒற்றைத் தலைவலிக்கு மந்திரம். கட்டை விரலினுலும், திர விரலினுலும் பொட்டை எந்தப் பக்கம் வலிக்கிறதோ தப்பக்கம் மோதிரவிரல்வைத்துக்கொண்டு பிறகு உறுவிவிடவு ) சொல்லியிருக்கிற மந்திரத்தை 21-தடவை ஜபிக்கவும். ஓம். நாசிஷீ பீடாஜாய் குருகோரக் ஷீராகாய். அர்த்தம். நோவு நக்கிறது போகவேணும் குருகோரக் என்ற ஸாதுக்கு இது ன் மிட்டாய். 38. ஒற்றைத் தலைவலிக்கு மருந்து எள்ளு பா அரைத்து சூரியனுக்கு முன் பொட்டில்போட்டு அனல்காட் டும். இந்தமாதிரி 3. நாள் செய்யவும். 5. தலைவலிக்கு மந்திரம். ர் காட்டிவிரல் கட்டை விரலினுல் பொட்டைப் பிடித்துக்கொ ) குலதெய்வம் பெயர்ச்சொல்லி உருவவும். 21-தடவைசெய்ய , பிறகு கொஞ்சம் சௌக்யம் இல்லாதபோனுல் இன்னம் 21- வைசெய்யவும் 6. பைத்யம்விடித்த நாய்கடிக்கு மந்திரம். பா புத்துமண்கொண்டுவந்து கோலி அத்தனை பெரிது 7-உருன் ள் தயார்செய்து ஒரு உருண்டை எடுத்து கடிவாயின்மேல் பின் ம் மந்திரத்தை சொல்லிக்கொண்டு 7-கோலியைத் தேய்க்கவு. தேய்க்கும்போது நாயின் மயிரின்மாதிரி நுரை வெளியாகும். ரம் ஓம் கர்ந்தாரீஸ்வாகா. இந்த மந்திரங்களிலும் ஓம் சொல் ண்டியது. ஓம் என்பதற்கு அர்த்தம் பஞ்சரத்தினம் முதல்





பக்கத்திலும் ஆரியவைதீக ஸந்தியாவிலும் பார்க்கலாம். வேண்டு மென்பவர்கள் எம். ஜே. ஷர்மா அன்கோ. [illegible] எழு திபெற்றுக்கொள்ளலாம்.

147987

## மந்திரம்.

இப்பூமண்டலத்தின் கண் மந்திர ஜாலங்கள் இருப்பது என்பது சுத்தபொய் எப்படிஎன்ருல் மோடி மோடி என்று சொல்லும்படியான ஒரு மந்திரம்இருப்பதாயும் அதுபிறரால் வைக்கும் படியான பொருளை எடுக்கும்படியான சக்திவாய்ந்ததும், என்று சில மந்திரவாதிகள் மிரட்டுகிருர்கள் அம்மந்திரவாதிகளிடம் எவனுவது ஒருவன்வந்தால் நீ வை நான் எடுக்கிறேன் என்றுசொன்னுல் அந்தமந்திர வாதியையே வைக்கும்படியாக திருப்பி சொல்லி தான் எடுக்கிறதாக சொன்னுல் ஒப்புகிறது இல்லை இன்னும் எவனுக இருந்தால் மோடிஎன்பது உண்மைதான் என்று வைத்தால் நான் எடுக்கதயாராய் இருக்கிறேன் அப்படிநான் எடுக்காவிடில் ரூ 50 இனுமாய் தருகிறேன்.

எம். ஜே. ஷர்மா. அன் கோ மதுரை.

## ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதைக்கவனித்து வாசியுங்கள்.

இதனுல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

பூலோகத்தில் ஈஸ்வர் சிருஷ்டியால் உற்பத்தியாகும் ஜனக்களுக்கெல்லாம் மேலான ஜென்மம் மானிட ஜென்மமென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயமே அப்படி மானிடஜென்மம் எடுத்தும் நேர்யில்லாத வாழ்வு கிடைப்பதரிது அதற்கு ஓர் உபாயம் பின் வருமாறு செய்வதுதான் நன்மை உண்டாகும்.

1. சூரிய உதயத்திற்கு 1-மணிநேரத்திற்கு முன்னெழுந்திருந்து ஈஸ்வரனைத் தியானம் செய்யவேண்டும். 2. கை கால் சுத்

செய்துகொண்டபிறகு தந்தசுத்தி செய்யவேண்டும். 3-வது தங்கள் பளத்துக் கேற்றபிறகாரம் கசரத்து செய்யவேண்டும் அப்படி செய்து திரேகத்திலிருந்து வியர்வை வந்தால் தேகம் வலுவாயிருக்கும். 4. அப்படித் தங்களுக்கு சக்தி யில்லாவிட்டால் 1-மணிநேரம் சுத்தமான காற்று வீசும்படியான இடத்தில் உலாவவேண்டும். 5. பிறகு 4-தினத்திற்கு ஒருதடவை எண்ணெதேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். ஒரு வாரத்திற்கு ஒருமுறை க்ஷவரம் செய்து கொண்டு சுத்தஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். 6. பிறகு ஈஸ்வரனை தியானம் செய்யவேண்டும். 7. தலைமயிரை சுத்தப்படுத்தி வாசனை திரவியங்கள் தடவிககொண்டுகல்கண்டு பொடிசெய்து கால்ப்படி பசும்பால் அல்லது 3-பலம் வெண்ணெயில் சாப்பிடவும் 8, 10 11-மணிக்குள்ளாக தங்கள் தங்கள் வீட்டில் வழக்கம்போல் சாப்பிடவேண்டியது, இந்த நேரம் பிரகாரம் சாப்பிட்டால் தங்கள் தேகம் குறையாமலும் நோயில்லாமலும் இருக்கலாம். 9. சாப்பிடும்படியான சாப்பாடு புதிதாயும் வயிற்றுக்குக் கொஞ்சம் குறைவாகவும் [illegible]ந்தவேளை சாப்பிடவேண்டியது என்று ஓர் நிர்ணயம் வைத்துக் கொண்டு அந்த நேரப்படி சாப்பிட வேண்டியது. அப்படி வேளை தப்பி சாப்பிடுகிறதினல் தேகத்திற்கு வியாதி சம்பவிக்கிறது. 10. [illegible]த்தியானத்திற்குப் பின் 4-மணி சுமாருக்கு பழம் தினுசுகளில் பழுத்தபழமாக சாப்பிடலாம் அப்படி சாப்பிட்டால் வயிறு சுத்தமாயிருப்பதும் தவிர தேகத்திற்கு பலத்தைத் தரும். 11. சாயங்காலவேளையில் தந்தசுத்தி செய்துகொண்டபிறகு 2-மணு சாவகாசம் பொருத்து சாப்பிடவும். 12. வெல்லம், எண்ணெ, பழயசாப்பாடு புளி, மிளகாய் அதிகம் உபயோகிக்கக்கூடாது. 13, அவரவர்கள் சக்திப்பிரகாரம் கால்ப்படி பசும்பாலும் 3-பலம் நெய்யும் அவசியம் சாப்பிடவேண்டியது. ஏழைகள் அவரவர்கள் சக்திப்படி சாப்பிடலாம். 14. இரவுகளில் 6-மணிநேரம் நித்திரை செய்யவேண்டியது. 15. பகலில் நித்திரை செய்வதினல் வியாதி சம்பவிக்கிறது, அப்படி நித்திரை செய்யவேணுமென்று பிரியமிருந்தால் வெயிற் காலங்களில் கொஞ்சம் நேரம் நித்திரை செய்யலாம். 16. தங்கள் தேகம் சௌக்கியமாய் இருக்கும்படியானகாலத்தில் மாதம் இருமுறை ஸ்திரீ சம்போகம் செய்யலாம். 17. வெயிற் காலங்களில் ஸ்திரீயிடம் மாதம் ஒருதடவை சம்போகம் செய்யவேண்டியது





18. காம, குரோத, லோப, மோகமதமாச்சரியம் பரஸ்திரீகமனம்துர் [illegible] இவைகள் எல்லாம் மனதில் குடிகொண்டு இருந்தால் அதுவே [illegible] வியாதிக்கு மூல காரணமாயிருக்கிறது ஆனபடியால் இவைகளெல்லாம் அனுசரித்து ஈஸ்வரத்யானம் செய்யவேண்டும் அப்படித் தியானம் செய்தால் தாங்கள் நெடுங்காலம் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுடன் ஜீவித்து பகவானுடைய பாதம்சேரலாம்.

## மனுதர்மசாஸ்திரம்.

வர்ஷா வர்ஷே அஸ்வமேதேனயோ யஜேத்சதம்ஸமா
மாம்ஸானிச நகாத்யேஸ்தயோ புண்யபலம் சமம்.

யார் 100 வருஷம் வரையில் ஒவ்வொரு வருஷம் அஸ்வமேத யக்ஞம் செய்தும், உயிர் போகும் தருணம் வரை மாம்சம் சாப்பிடாமல் இருப்பதும் சரிபலம்.

ஓம். பரமாத்மனே நம: அஹிம்ஸா பரமோதர்ம:

இம்‌து 28—11—17 இல் எம். ஜே. ஷர்மா அவர்கள் அக்கிராஸனாதிபத்யத்தின் கீழ் ஆர்ய ஸமாஜத்தின் மெம்பராகிய பாபு[illegible]தார் P. V. நாராயணய்யங்காரால் பிரசிங்கப்பட்ட உபன்னியாசத்தின் சாராம்சம்.

அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்பது குறள். எப்படி அ என்பது எழுத்துக்களுக்கெல்லாம் முதலாக உள்ளதோ அதுபோல் இப்பிரபஞ்சத்திற்கு ஆதிகாரணம் [illegible] கடவுளைக்காண முடியுமா என்று கேட்குங்கால் அதற்கு [illegible] பின்வருமாறு:—கல்லிற்குள் இருக்கும் பிரகாசத்தை [illegible] கல்லோடு தாக்கி நெருப்பு உண்டாக்குவதுபோல மனம் [illegible] ஞானம் [illegible]தோடு சேர்த்துப் பார்ப்போமானல் அக்கினி என்று சொல்லப்பட்ட ஜயோதிஸ்வரூபமான கடவுளை காண்போம்.

மாகடிய கடலாற் சூழப்பட்ட இந்த உலகத்தில் இருக்கும் ஜீவராசிகளுக்கெல்லாம் சிறந்தது மானிட ஜன்மம். மானிட ஜன்மம் நிலையற்றது. அனித்யானி சரீராணி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதோ அல்லது பிறகோ இறப்புண்டு இப்பிறவியில் அனேக கஷ்டங்கள் உண்டு. இந்த கஷ்டங்களை நீக்கிக் கொள்ள அநேக உபாயங்கள் உள. அவைகளில் தர்மமே மிகச் சிறந்தது. யாதாமொருவன் இப்பிறவிக்கஷ்டங்களை கடந்து சுகமாக இருக்க விரும்புவனேயாயின் அவன் தர்மம் செய்யவேண்டியது முக்யம். தர்மத்தில் சிறந்த்து ஹிம்சை செய்யாமலிருப்பதே. ஆகவே அஹிம்ஸா பரமோதர்ம என்பது ஸ்ருதி. ஆதலால் நாம் ஜீவன்களிடத்தில் கருணையோடு இருக்கவேண்டும். கருணையென்பது அன்பு. நாம் சகோதரரிடத்தில் எவ்வளவு பிரியத்தோடு இருக்கிறோமோ அதுபோலவே ஜீவனாகிய சகோதரரிடத்தும் இருக்கவேண்டும். கருணையில்லாதவர்களே ராக்ஷஸர்கள் ராக்ஷஸர்கள் வேறென்று இருப்பதாக நினைக்கவேண்டாம். ஜீவஹிம்சை செய்பவனே ராக்ஷஸன். அவனுக்கு கருணை எப்படி உண்டாகும். தன்னூன் பெறுக்கற்குத் தான் பிறிதூன் உண்பான் எங்ஙனமாளுமருள். குறள் அவன் ஆதலால் மாம்சம் தின்பவர்களாகிய ராக்ஷதர்களுடன் சேர்ந்தவன் நீங்களும் ராக்ஷஸர்களாவீர்களென்பது நிச்சயம். ஆதலால் துஷ்டசாவகாசருடன் சேராமல் அவர்களை அழைத்து நற்போதனைகளைச் செய்வீர்களாக அப்படிச்செய்வோமானால் அவரவர்க்கு புத்தி வந்து நல்வழிக்கு வந்துவிடுவார்கள். இருந்தாலும் படைகொண்டார் நெஞ்சம் போனன்றுக்காதொன்றன் உடல்சுவையுண்டார் மனம். கொலைதொழிலை செய்யும் ஆயுதத்தைக்கொண்ட ஒருவன் எப்படி கொலைத்தொழிலையே செய்வானோ அதுபோல மாமசம் சாப்பிடுபவனுடைய நாக்கு மாம்சம் சாப்பிடவே தூண்டும்.

முற்காலத்தில் மாம்சம் சாப்பிடுபவர்கள் கிடையவே கிடையாது. இப்பொழுதோ நூற்றுக்கு 90 பேர்கள் மாம்சம் சாப்பிடுகிறவர்களாக இருக்கிறார்கள். அது அசுத்தமென்று அறியாதவர்களே இப்படி செய்கிறார்கள். நமக்கு ஒரு விதக்கெடுதியும் செய்யாத





புல்லைத்தின்று ஜீவிக்கும் மிருகங்களை நாம் கொன்று தின்பது மகா பாதகமல்லவா? ஒவ்வொரு மிருகத்திற்கும் அனேக வியாதிகள் உண்டு. அந்த வியாதி மிருகத்தின் மாம்சத்தை சாப்பிட்டால் நமக்கு வியாதி வராதா அந்த வியாதிக்கு காரணமான மாம்சத்தை அருந்தாமல் இருப்பீராக. மற்றும் ஜீவஹிம்சை செய்தால் பாபம் உண்டு. ஆயிர யாகம் செய்தாலும் ஒரு ஜீவஹிம்சை செய்தால் யாகத்தினால் பிரயோஜனமில்லை. ஆகையினாலே மாம்சம் தின்னாதவிரதமொன்றனாலே ஆயிரயாகஞ் செய்த பலன்கி

ஆதலால் நாம் மாம்சம் தின்பவர்களைக்கண்டால் அதனால் உண்டாகும் கெடுதல்களைச் சொல்லி நன்னெறிக்குக் கொண்டுவர வேண்டியது, நம்கடமையாகும். யாதொருவன் ஜீவன்களைக்கொல்லாமலும் மாம்சம் தின்னாமலும் இருக்கிறானோ அவனே மஹான். ஆதலால் நாம் பாபத்திற்கு ஆளாகாமல் ஜீவன் களிடத்தில் கருணையோடு இருந்தால் எப்பொழும் பிரியத்தோடு நன்றி பாராட்டும். அதுவுமல்லாமல் நமக்கு முக்தியும்கிடைக்கும் என்பது துணிபுகொல்.

கொல்லான் புலாலை மறுத்தானைக்கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

நான் வடதேசத்தான் எனக்கு தமிள்பாஷை தெரியாது.

(எனக்கு மிகவும் தமிழ் பாஷை நன்றாய் தெரியாது நான் வடதேசத்து மனிதன் ஆகையால் சமிஸ்கிரதம் நன்றாய் தெரியும் ஆதலால் அனேக பள்ளிப்பிள்ளைகள் நான் சொல்லுவதை தமிழில் எழுதினார்கள் ஆகையால் இப்புஸ்தகத்தில் ஏதாவது பிழைகள் இருந்தாலும் அவைகளை பொறுத்துக்கொள்ளவும் இப்புஸ்தகத்தை தமிழில் மொழிபெயர்த்த பள்ளிப்பிள்ளைகளுக்கு நான் வந்தனம் பண்ணுகிறேன் இரண்டாவது பதிப்பில் இவ்விதமான பிழைகள் ஏற்படாது அதற்கு தகுந்த ஏற்பாடு செய்துயிருக்கிறேன்

## பஞ்சரத்ன பல்பொடி

மேகரோகத்தினாலும், சீதள ரோகத்தினாலும் அல்லது விதஜன்னி ரோகத்தினாலும், இன்னும் எந்த விதத்தால்

பல்லு நோயானாலும் எவ்வளவு கடூரமாக இருந்தாலும், முதல் நாள் துலக்கும் போதே மருந்தின் குணம் பார்க்கலாம். இரண்டு மூன்று தினத்தில் ... நல்ல குணமடையலாம். பல்லில் இரத்தம் வருதல் சீழ் ... விக்கம் முதலான எல்லா வியாதிகளும் சௌக்கியமாகிவிடும். டப்பி 1-க்கு அணா 4

## மலசுத்தி மாத்திரை.

இந்த மலசுத்தி மாத்திரையானது பிரதிதினம் ... ள்ள, வியாதிகள். கிருமிகள், துர்மங்கள், துர்நீர்கள், முதலானதுகளை வெளிப்படுத்தி சுகத்தைத்தரும். அஜீரணம் முதலிய வைகளைக்கண்டித்து ஜீரணத்தைத் தரும் டப்பி 1-க்கு ரூ. 0-12-0

## அடியில் விவரிக்கப்பட்ட வியாதிகளை கஷ்ட நிவாரண ஆரிய மாத்திரையே கண்டிக்கும்.

1 பல்லைப்பற்றிய சகல வியாதிகளுக்கு
2 சிரங்குகளுக்கு
3 இந்திரிய கஷ்டத்திற்கு
4 ஸ்திரீயால் சேர்ந்த வெள்ளைவியாக்கு
5 கண் நோய்களுக்கு
6 காது நோய்களுக்கு
7 மூக்கைப்பற்றிய பீனஸத்துக்கு
8 பவுந்திரத்திற்கு
9 நீர் அடைப்பிற்கு
10 பேய் பிசாசுக்கு
11 மலபாதைசிக்கலுக்கு
12 வாந்திபேதிக்கு
13 சகல ஜுரத்திற்கு
14 பாண்டு ரோகத்திற்கு
15 விரைவாதத்திற்கு
16 காமாலைக்கு
17 வயிற்றினுள்கட்டிகளுக்கு
18 அரையாப்பு கட்டிகளுக்கு
19 கள்ளிப்பு கிரந்திக்கு
20 கை கால் பிடிப்புக்கு
21 மார் நோவுக்கு
22 வயிற்று வலிகளுக்கு
23 கை கால் குடைச்சலுக்கு
24 மண்டை கறப்பான்
25 தேள்கொட்டிற்கு
26 ஸ்திரீகள் மாதப்பிரவேசமாகா தவர்களுக்கு
27 குழந்தையில்லாதவர்களுக்கு

1. இக்கஷ்ட நிவாரண ஆரிய மாத்திரையானது யோகீஸ்வரர்களால் கண்டுபிடித்து அநுபவத்தில் நல்ல குணத்தைத்தரக்கூடியதும் மலையடிவாரங்களிலுள்ள மூலிகைகள் என்னும் பச்சிலை





களால் செய்யப்பட்டது. மற்ற மருந்துகளைப்போல் வீறம், பூறம், ரஸம், கெந்தகம், பாஷாணம் முதலியதுகளால் செய்ததல்ல. சிறுவர் முதல் விருத்தர் வரையில் பயமின்றி சாப்பிடலாம். வாய்பிடிக்காதுபல் போகாது.

2. நம்மருந்தைப்பற்றி அதிகமாய் நான் புகழ்ந்து பேசவேண்டியதில்லை. ஒரு தடவை வாங்கி சாப்பிட்டால் அதின் குணங்களை நன்றாய் தெரிந்து கொள்வீர்கள் மாத்திரை வாங்குபவர்களுக்கு அநுபான லீஸ்டு அனுப்பப்படும்.

42. மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 2-4-0

நம்மாத்திரைகள் சாப்பிட்டு வியாதிகள் குணமானதற்கு அநேக கனதனவான்கள் நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்கமெடல்களும் அநேகம் கொடுத்திருக்கிறார்கள்

இன்னும் பில்லி சூன்யம், பேய்பிசாசம் ஓட்டப்படும். இன்னும் எவ்வித வியாதியாயிருப்பினும் கவனித்து கூடிய சீக்கிரம் குணம் செய்யப்படும். பாரிசவாய்வு, குஷ்டரோகம், காக்காவலிப்பு, பயித்தியம் முதலிய கொடிய ரோகங்களையும் சொஸ்தம் செய்யப்படும்.

தெற்காவணி மூலவீதி கணபதி அக்ராஹாரம் மதுரை

## எம். ஜே. ஷர்மா, & CO.

தோலைப்பற்றின வியாதிக்கு மருந்து—இந்தமருந்து பூச்சிகள்கடித்து புண்ணாகியிருப்பதற்கும் எச்சல் தழும்புபோல் தடித்து நீர், வடிதல் அதில் அரிப்பு முதலானதுகள் ஏற்பட்டு தேகத்திற்கு உபத்திரவத்தையும், அரு வருப்பையும் உண்டாக்குதல் முதலான படர்கடிகளை சீக்கிரத்தில் சௌக்கியம்செய்யக்கூடிய மருந்து டப்பி 1-க்கு ரூ. 0-4-0

கண் நோய் அல்லது கண் வலிக்கு மருந்து இந்த மருந்தானது விருத்தர் முதல் சிசுக்கற் முதலானவர்களுக்கு ஒரு டப்பி

பல்லுன்றி உபயோகித்தால், கண்ணிலுள்ள சிகப்பு, நீர், சுறப்பு, கண் நாள் பூவிக்கம், கண்வலி கண்கூச்சம் முதலானதுகளை சிக்கிரத்தில் சௌக்மூன்றுகியம் செய்யக்கூடியது.

## அநேக தங்கமெடல்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்ற மந்திரசாஸ்திரி புரொப்பஸர் எம். ஜே. ஷர்மா

சகல வியாதிகளையும் நிவர்த்தி செய்யக்கூடியதும் தோட்டகாரியங்களில் அனுகூலம் கோடுக்கக்கூடியதுமான வெள்ளிதாயத்து.

### தாயத்தை உபயோகிக்கும் விதம்.

இத்தாயத்தை கை கழுத்து முதலிய விடங்களில் கட்டிக்கொள்ளவும் எவரொருவர். இத்தாயித்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்களோ அவருக்கு தலைவலி, கைகால்வலி, முதலிய இம்சை ஏற்பட்டால் கையினால் தசனேநோவிருக்கும் இடத்தை 11 தடவை அல்லது 21 தடவை தடவினால் சௌக்கியமாகும் கொஞ்சம் நாள்பட்ட வியாதியானல் 3-நாள் அல்லது 7-நாள் வரைக்கும் மேல் சொல்லியபடியே தடவினால் சூரியனைக்கண்ட பனிபோல் விலகிவிடும். இத்தாயத்தை வைத்திருப்பவருடைய குடும்பத்தில் யாருக்காவது ஏதாவது தோஷம் நேரிட்டால் தாயத்தைவைத்திருப்பவர்கள் வேப்பிலையைக் கொண்டு இருபத்தோருதடவை தடவிவிட்டு அந்த வேப்பிலையை நெருப்பில்போட்டுப் புகைப்போடவும் தேஷம் நிவர்த்தியாகும். தேள் கொட்டியவர் யாராயிருந்தாலும் அவர்களுக்குக் கொட்டிய விடத்திலிருந்து 21 தடவை தடவிகொடுத்தால் உடனே விஷம்இறங்கி ஆனந்தத்தைதரும்.

## ஜெபம்செய்த வெள்ளிதாயத்து **0—12—0**

### ரக்தசோதக்டானிக்

இந்த ஆச்சரியமான டானிக் இருமல் வீர்ய கஷ்டம் முதலியவைகளுக்கு சொஸ்தம்செய்கிறது. தேகத்திற்குபலத்தை கொடுக்கிறது இதுமிகவும் சுத்தமானது. இது வீரம் பூரம் முதலிய



நிவாரண ஆரியமாத்திரை 42 மாத்திரை அடங்கிய [illegible] 1-க்கு ரூ 0
லதோஷ நிவாரணம் ஜெபம் செய்த வெள்ளித்தாயத்து 1-க்கு 0 12 0
தலைவலி மருந்து 0—4—0 சுதாபரதச் சூரணம் 0 4 0
வயிற்றுவலி சூரணம் அரைஅவுன்ஸ் புட்டி 1 க்கு 0 4 0
மலசுத்தி மாத்திரை விலை அணு 0 12 0
வெள்ளை, மஞ்சள் இரத்தஒழுகல் உஷ்ணங்களுக்கு 3 8 0
வாய்வுகளுக்கு 1 8 0
கண்சம்மந்தமான பார்வைக்குறைவு 2 0 0
அஜீரணவாய்வு, மகோத்ரம். மலபந்தம், வயிற்று நோய், கடுகடுப்பு, ஜீரணமாகாமை 1 4
பல்லுநோய், பல்லில் இரத்தம் சீவடிதல் ஈருவிளருதல் வாய் நாற்றம் இவைகளுக்கு
காதுநோவு, காதுவாய்வு, காதில் சீழ்வடிதல் காது குடைச்சல் காது அடைப்பு ஜாலம் 0 செய்
மூக்கில் சிலந்து, பீனிசம் மண்டை குடைச்சல் 4
கறிமேகம், வெள்ளைகுஷ்டம், குஷ்டம் 25 ஒரு
தேள் கடி மருந்து 0 ாவி
க்ஷய ரோகங்களுக்கு 1—0—0 சகலஜுரங்களுக்கு 1 ப 0
சிறியகுழந்தை சகலவியாதிகளுக்கு 2 8 0
சுவாசம் அண்டவாய்வுக்கு 6-0-0 சுதாதவாதச் சூரணம் 0 6 0
பாலாபிரட் பாட்டில் 1-14-0 சந்திர முகிதைலம் புட்டி 1 1 4 0
நேத்ரசந்திரோதயம் 1-4-0 பஜிலிவலிஹேறானந்து சீதாசதா ரூ 2. அமிர்தசரகர்ம் 0 12 0
மூலகுடுக்கு ரூ 3-4-0 பல்வலி தைலம் 0-10-0 காமகல்யாணம் ரூ 3
பஞ்சராஜதைலம் அ 14 பாலரக்ஷாகூட்டி ரூ 1 மோயாவிந்து 1-12
கூந்தல்தைலம் 1-8-0 டிஞ்சர் 0-14-0 மேலேகண்டமருந்துகள் எம். ஜெ ஷர்மாவிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கஷ்ட நிவாரண ஆரியமாத்திரை அடியில்கண்ட கமிஷன்யேஜண்டுகளிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

(1) S.A. சொக்கலிங்கம் பிள்ளை மேலாவணி மூல் வீதி மதுரை.
(2) ராம்ராய் அன் கோ திருப்பறங்குன்றம்
(3) வைத்தியர் பழனியப்ப முதலியார் குழித்தலை
(4) ராஜாராம்சிங் வேலூர்

இன்னும் கமிஷன் ஏஜண்டுகள் தேவை கமிஷன் ஏஜண்டுகளாகவர விருப்பமுள்ளவர்கள் தெற்காவணி மூலவீதி கணபதி அக்கிரஹாரத்திலிருக்கும் எம். ஜே. ஷர்மா அவர்களிடத்தில் பேசிக்கொள்ளலாம்